DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.59/2026

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | பூபாலன் (Lw -4) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 05.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம் பழையபாளையத்தில் குடியிருந்து ஓட்டுனராக வேலைசெய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது அத்தை மகன் ஆவார்.

கடந்த 30.11.2025ம் தேதி காலை சுமார் 11.00 – 12.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது வாதி பாரதியின் அவரது மகனும் இவ்விபத்தில் இறந்துபோன அவரது தாயார் மாராயி என்பவரும் மற்றும் ஆஜர் எதிரியான எனது அத்தை மகனும் அவரது நெருங்கிய உறவினரின் திருமணத்திற்காக புதுச்சத்திரம் செல்லவேண்டி எதிரி காரை ஓட்ட பாரதியும் அவரது தாயாரும் பின்னால் அமர்ந்துகொண்டும், பாரதியின் மகன் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டும் சென்று கொண்டிருந்தபோது மேற்படி காரானது சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டிற்கு அருகில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. நான் தகவல் கேள்விபட்டு நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் சென்றபோது மாராயி இறந்திருந்தார். பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**